# இலங்கையில் வட மாகாண சபைத் தேர்தல்கள்

செப்டம்பர் 24, 2013

இலங்கையில் வடமாகாண சபை உள்பட மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் 2013 செப்டம்பர் 21ந்தேதி வெற்றிகரமாக நிறைவுற்றதை இந்திய அரசு வரவேற்கிறது. அதிக அளவில் வாக்காளர்கள் வந்திருந்து வாக்களித்தது, பல்வேறு அரசியல் கட்சிகள் உற்சாகத்துடன் தேர்தலில் பங்கேற்றது ஆகியவை, ஜனநாயக விழுமங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கான தேர்தல் உள்ளிட்ட பல்வேறு பிரதிநித்துவ அமைப்புகளுக்கான தேர்தலில் பல்வேறு நிலைகளுக்கு இலங்கை மக்கள் தொடர்ந்து உறுதிபூண்டுள்ளதை காட்டுகிறது. இந்த தேர்தல் குறித்து தெற்காசிய தேர்தல் மேலாண்மை அமைப்புகளின் கூட்டமைப்பைச் சோந்த தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் காமன்வெல்த் தேர்தல் பார்வையாளர்கள் கருத்துக்களை நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். ஒட்டுமொத்தத்தில் மக்களின் விருப்பம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதை இந்த தேர்தல்கள் பிரதிபலிக்கின்றன.

இலங்கை அரசு வடகிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்துவது என சர்வதேச சமுதாயத்திற்கு வழங்கிய உறுதிமொழியை கவுரவித்துள்ளது. இதே போல் சர்வதேச சமுதாயத்திற்கு இலங்கை அரசு வழங்கிய பிற முக்கிய உறுதி மொழியை, 13வது சட்டத்திருத்த்தை முழுமையாக நிறைவேற்றுவது மற்றும் முன்னெட்டிச் செல்வது என்பன உள்ளிட்ட உறுதிமொழியையும் நிறைவேற்றும் என்று நாம் எதிர்நோக்குகிறோம்.

தமிழ் தேசிய கூட்டணியும் இலங்கை அரசும் விடுத்துள்ள ஆக்கபூர்வமான அறிக்கைகளையும் நாம் கவனித்துள்ளோம். வட மாகாண மக்கள் முன்னேற்றத்திற்காக இருவரும் ஒருவருக்கொருவர் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்திருப்பது உண்மையில் மனநிறைவினை அளிக்கும் விஷயமாகும். இரு தரப்பினரும் ஆக்கபூர்வமாக பங்கேற்று, கூட்டாண்மை உணர்வுடன் பணியாற்றி, பரஸ்பரம் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். அதன் மூலம் வட மாகாண மக்களின்

அவசர தேவைகள், அங்கு 30 ஆண்டுகள் நடைபெற்ற ஆயுத மோதல்கள் காரணமாக சமீபத்தில் உருவெடுத்துள்ள தேவைகள் ஒரு வித துரித கதியில் மற்றும் நோக்குடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இத்தகைய ஒத்துழைப்புடனான அணுகுமுறை மட்டுமே சம்பந்தப்பட்ட சமுதாயங்களிடையே உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

இந்திய அரசு இரு தரப்புடன் இணைந்து பணியாற்றி, இந்த நடைமுறைகளை முன்னெட்டிக் கொண்டு செல்ல உறுதி பூண்டுள்ளது. அதன் மூலம் சிறுபான்மையினர் உள்ளிட்ட அனைத்து சமுதாயங்களும் ஐக்கிய இலங்கையில் சமமான பங்குதாரர்கள் என்ற உணர்வினை பெறுவார்கள். சமத்துவம், நீதி, கண்ணியம் மற்றும் சுயமரியாதை நிறைந்த வருங்காலத்தை எட்டி அப்போது தான் செல்ல முடியும்.

**புது தில்லி**
**செப்டம்பர் 24, 2013**